# OS.No.237/2024, Dated 17.02.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 17th day of February 2026.

**பி.வா.சா.1 – வெங்கடேசன் த/பெ. சுந்தரமூர்த்தி வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வாதியை எனக்கு 10 வருடங்களாக தெரியும். அவரது தகப்பனாரை சுமார் 15 வருடங்களாக எனக்கு தெரியும். நான் கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். அந்த வேலை மட்டும் தான் செய்கிறேன். நான் வாதி பெயரில் 2013ம் ஆண்டு பெரணமல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அடமான கடன் பத்திரம் பதிந்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் தான் நான் பதிவு செய்து கொடுத்த அடமான கடன் பத்திரம் என்றால் சரிதான். அதிலுள்ள கையெழுத்தும் புகைப்படமும் என்னுடையதுதான். அந்த பத்திரத்தை நான் படித்து பார்க்காமல்தான் கையொப்பம் செய்தேன். அந்த பத்திரத்தில் சாட்சிகளாக கையெழுத்து போட்டது எனது அக்கா கணவரான விநாயகம் மற்றும் வாதியின் தகப்பனார் ஆவர். நான் ரூ.2,50,000/- கடன் வாங்கி கொண்டு அந்த பத்திரத்தை எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. முதலில் ரூ.50,000/- கடன் வாங்கினேன். அதன் பின்னிட்டு ரூ.1,00,000/- கடன் வாங்கினேன். அவர்கள் ரூ.2,50,000/- எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் எழுதிக்கொடுத்தேன். மேற்படி அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்த பின்னிட்டு நான் வட்டி எதுவும் கொடுக்கவில்லை. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னை மிரட்டி எழுதி வாங்கியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அது உண்மை தான். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் எனக்கு Heart Attack ஏற்பட்டதால் பதில் அறிவிப்பு கொடுக்க இயலவில்லை. நான் ராணிப்பேட்டை SMH மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். என்னுடைய மருத்துவ சான்றுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் மிரட்டியதால் கையொப்பம் போட்டேன் என்று நான் சொல்லியுள்ள விபரங்கள்

எனது அக்கா கணவருக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னை மிரட்டி வாங்கியதாக நான் காவல் நிலையத்திலோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலோ புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்த விபரம் தெரியும். அதன் பின்னிட்டு எனது தாயார் மட்டும் வாதியிடம் சென்று பேசினார். தாவா சொத்தில் எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் எனது அக்கா கணவர் பயிர் வைக்கிறார். வாதி கோரியுள்ளபடி தாவாபடி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.17 16:09:44 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி